# பகுதி B - கட்டுரை

**அறிவுறுத்தல்கள் :**
- **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
- தேவையான இடங்களில் பெயரிடப்பட்ட வரிப்படங்களை வரைக.

(ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் **150** ஆகும்)

5.

(i) வளிமண்டல சாரீரப்பதன் பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விவரிக்க.

(ii) இலங்கையின் பண்டைக்கால விவசாயச் செழிப்புக்கு உள்ளூர் தொழினுட்பம், காரணமாக அமைந்த விதத்தை உதாரணங்கள் தந்து விவரிக்க.

(iii) யூரியா, மும்மை சுப்பர் பொசுபேற்று (TSP) மியூறியேற்றுப் பொட்டாசு (MOP) ஆகிய பசளைகளைப் பயன்படுத்தி N, $P_2O_5$, $K_2O$ விகிதம் 4:3:2 எனக் கொண்ட பசளைக் கலவை 100 kg இனைத் தயாரிப்பதற்கு மேற்படி பசளைகளில் தேவைப்படும் நிறையை கிலோகிராமில் கணிக்க.
யூரியா (N- 46%) , TSP ($P_2O_5$ - 45%) , MOP ($K_2O$ - 60%)

6.

(i) எளிய சூரிய இனப்பெருக்கியைத் தயாரித்து அதனுள் பொலித்தீன் சாடிகளில் நாட்டப்பட்ட லெமன் தண்டுத் துண்டங்களை வேர்விடச் செய்யும் விதத்தை வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக.

(ii) பயிர்செய் நிலமொன்றில் பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாட்டிற்கென கைக்கொள்ளத்தக்க இரசாயனமல்லாத முறைகளை விவரிக்க.

(iii) விவசாயத்தில் ஈடுபடும்போது ஏற்படத்தக்க இடர்களை இழிவளவாக்குவதற்கு கைக்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விவரிக்க.

7.

(i) பயிர்ச்செய்கையில் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் நிகழும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு அவ்வொவ்வொரு இழப்பையும் குறைப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளைக் கலந்து ரையாடுக.

(ii) விவசாய முக்கியத்துவம் வாய்ந்த உயிரியல் மகரந்தச் சேர்க்கைக் காரணிகள் குறைவடைவதற்கு ஏதுவாக அமையும் காரணங்களைக் குறிப்பிட்டு, அந்த மகரந்தச் சேர்க்கைக் காரணிகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விவரிக்க.

(iii) பயிர்களில் விகார இனவிருத்தியை மேற்கொள்ளும் முறைகளை விவரிக்க.

8.

(i) தாவர போசணைக் கிடைப்புத் தன்மையில் மண் நுண்ணங்கிகளின் செல்வாக்கினை விவரிக்க.

(ii) சேற்றுநில நெற்செய்கைக்கென நிலத்தைப் பண்படுத்தும் படிமுறைகளை விவரிக்க.

(iii) உணவுக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தரங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

9.

(i) பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வுச் செயன்முறையின்போது, படிமுறைகளின் மதிப்பீட்டை மேற்கொள்வதன் இன்றியமையாமையை விளக்கி, அந்தச் செய்முறையின் அனுகூலங்களை விளக்குக.

(ii) மண்ணின்றிய பயிர்ச்செய்கையாக, சுற்றோட்டமல்லாத திரவ ஊடகத்தில் வேர்கள் அமிழ்ந்த நிலையில் தக்காளிச் செடிகளை பயிர்செய்து பராமரிக்கும் விதத்தை விவரிக்க.

(iii) பயிர்ச்செய்கையின் போது நீர்ப்பாசன வினைத்திறனை அதிகரிக்க கைக்கொள்ளதக்க உபாய முறைகளை விளக்குக.

10.

(i) பசுவின் வேட்கை வட்டத்தின் பல்வேறு கட்டங்களை வரைபில் வகைகுறித்து, அந்தக் கட்டங்களில் ஓமோன்களின் தொழிற்பாடு, இனப்பெருக்கத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை விவரிக்க.

(ii) பயிர்ச்செய்கையின்போது, சூழல் நிலைமைகளை ஆளுகை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு பிரதான பாதுகாப்புக் கட்டமைப்புகளுக்கான உதாரணங்களைக் குறிப்பிட்டு அவற்றில் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விவரிக்க.

(iii) தாவரங்களில் ஒளித்தொகுப்பை வினைத்திறனாக்கி விளைச்சலை அதிகரிப்பதற்கு பயிர்ப் பரிபாலனத்தின்போது. கைக்கொள்ளத்தக்க உபாய முறைகளை விவரிக்க.